தினமணி . 03.03.2018

# டிஎன்பிஎல் ஆலை சார்பில் காளான் வளர்ப்பு பயிற்சி



பயிற்சியை தொடக்கி வைக்கிறார் ஆலையின் துணை பொது மேலாளர் (மனித வளம்) சுரேஷ். உடன் முதுநிலை மேலாளர் (மனித வளம்) ராஜாராம் உள்ளிட்டோர்.

கரூர், மார்ச் 2: தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சமுதாய நலப்பணித் திட்டத்தின் கீழ் ஆலையைச்சுற்றியுள்ள புஞ்சைபுகளூர், புஞ்சைதோட்டக்குறிச்சி, காகித ஆலை ஆகிய மூன்று பேரூராட்சிகளுக்குட்பட்ட பகுதி பொதுமக்களுக்கு காளான் வளர்ப்பு பயிற்சி வியாழக்கிழமை அளிக்கப்பட்டது.

பெரம்பலூர் ஹான்ஸ் ரோவர் இன்ஸ்டிடியூட் திறன் மேம்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து நடத்திய பயிற்சிக்கு ஆலையின் பொதுமேலாளர் (மனிதவளம்) பட்டாபிராமன் தலைமை வகித்தார். துணைப் பொது மேலாளர் (மனிதவளம்) சுரேஷ் பயிற்சியை தொடக்கிவைத்தார். முதுநிலை மேலாளர் (மனிதவளம்) ராஜாராம் சிறப்புரையாற்றினார்.

பயிற்சி வகுப்பில் பொதுமக்கள் தாங்களே சுயதொழில் தொடங்குவதற்கு ஏதுவாக காளான் வளர்ப்பு முறை, பண்ணை அமைத்தல், பாதுகாத்தல், பதப்படுத்துதல் உள்ளிட்ட அனைத்து பயிற்சிகளும் வழங்கப்பட்டன.